# ஸ்ரீ காஞ்சி புது பெரியவாள் திருக்கோவலூர் விஜயம்

## (19-6—1971)

கேரளாவிலுள்ள குருவாயூர் ஆலயத் திருப்பணியைத் துவக்கி வைக்கச் சென்றிருந்த காஞ்சி காமகோடி பீடாதிபதி புதுப் பெரியவாள் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் திரும்பிக் காஞ்சிபுரம் செல்லும் மார்க்கமாகத் திருக்கோவலூர் விஜயம் செய்தார். ஜூன் 19உ சனிக்கிழமை காலை 5 மணிக்குப் பாதயாத்திரையாக வரும் ஸ்வாமிகளைத் திருக்கோவலூர் ஆஸ்திக மக்களும் சத்சங்கத்தாரும் நகர எல்லையிலிருந்து பூர்ண கும்ப மரியாதையுடனும், வேத கோஷங்களுடனும் வரவேற்று, ஊர்வலமாக அழைத்து வந்தனர். காலை 9 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் தென்பெண்ணை நதியில் நீராடி, ஸ்ரீ வீரட்டேசுவரர் தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்தார். ஸ்ரீ ஸ்வாமிகளைக் கோயில் நிர்வாகிகள் பூர்ணகும்ப மரியாதைகளுடன் ஆலய வாசலிலிருந்து வரவேற்று அழைத்துச் சென்றனர். ஸ்வாமியைத் தரிசித்து ஸ்வாமிகள் முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்குக் கோயில் மரியாதைகளுடன் அழைத்து வரப்பட்டார்.

மாலையில் ஸ்ரீ ஸ்வாமிகள் திருவிக்ரம தேவஸ்தானத்திற்குச் சென்றார். ஆலய மரியாதைகளுடன் நிர்வாகிகள் வரவேற்றுத் தரிசனம் செய்வித்தனர். அங்கிருந்து ஸ்வாமிகளுக்குத் திருக்கோவலூர் சத்சங்கத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு விழா வைபவத்திற்கு அழைத்து வரப்பட்டார். டில்லியில் மொழிக் கமிஷன் மெம்பராயிருந்து ஓய்வு பெற்றிருக்கும் வி.ஜி. ராமச்சந்திரன் சங்கத்தின் நடவடிக்கைகளை விளக்கி ஸ்வாமிகளை அருளுரை வழங்கவேண்டும் எனப் பிரார்த்தித்தார். சங்கத்தின் சார்பாக சமஸ்கிருதத்திலும், தமிழிலும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டன. ஸ்ரீ ஸ்வாமிகள் எல்லோருக்கும் ஆசி கூறுகையில் "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்று கூறி, ஆயிரக்கணக்கானவர்கள் பக்தி, சிரத்தையுடன் திருப்பணியில் ஈடுபட்டு உருவாக்கியிருப்பது இந்தக் கோபுரங்கள். அப்படிப்பட்ட கோபுரங்கள் எல்லோருக்கும் அங்கிருந்து காணமுடியும். ஆலயத்தினுள் சென்று பகவானைக் காண முடியாதவர்களும் இருந்த இடத்திலிருந்து தரிசிக்கக் கூடியதான இக்கோபுர தரிசனத்திற்குக் கோடி புண்ணியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது, என்றார்.

பிறகு ஸ்வாமிகள் கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்திற்கு விஜயம் செய்தார். அங்கு ஸ்வாமிகளை ஆரிய வைசிய சங்கத்தார் பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர். ஸ்வாமிகள் காலையில் நதி ஸ்நானம் முடித்துவரும் வழியில் திரௌபதி அம்மன் கோயிலுக்குத் திடீர் என விஜயம் செய்தார். தற்போது திருவிழா நடந்து கொண்டிருப்பதால் அங்கிருந்த விழாக் கமிட்டியினரும் பூசாரிகளும் ஸ்வாமிகளை வரவேற்றார்கள். சனிக்கிழமை ஏகாதசியானதால் ஸ்வாமி

களுக்கு பிக்ஷை இல்லை. ஞாயிற்றுக்கிழமை திருக்கோவலூர் ஆஸ்திக மகாஜனங்கள் சமஷ்டி பிக்ஷையாக நடத்தி வைத்தார்கள். ஸ்வாமிகள் நகரத்தின் பல பகுதிகளுக்கும் பாத யாத்திரையாக வந்து ஆஸ்திக மக்களுக்குத் தரிசனம் தந்தது மிகவும் சிறப்பாக இருந்தது. இங்குள்ள சேவக மாணவ விடுதிப் பகுதிக்கு ஸ்வாமிகள் வந்தபோது சங்க நிர்வாகியும், மேற்பார்வையாளரும் விடுதியிலிருந்த ஹரிஜன மாணவர்களை வரிசையாக அழைத்து வந்து ஸ்வாமிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஸ்வாமிகள் ஹரிஜன மாணவர்களுக்கு விசேஷ பிரசாதங்களை வழங்கி ஆசீர்வதித்தார். விடுதியின் நிர்வாக சிரமங்கள் குறித்து நிர்வாகியுடன் விசாரித்தார்.

21-6-71 அன்று காலை 3-30 மணிக்கு ஸ்வாமிகள் திருக்கோவலூரிலிருந்து வேட்டவலம் மார்க்கமாக செஞ்சிக்குத் தன்னுடைய பாத யாத்திரையைத் தொடர்ந்தார். நகர ஆஸ்திக மக்கள் பெண்ணை நதிக்கரை வரை ஸ்வாமிகளின் யாத்திரைக்கு உடனிருந்து விடை பெற்றனர்.